[18th July 1957

APPENDIX.

The following Member took the prescribed **oath** before the Hon. Speaker in his Chamber before the commencement of the sittings of the House to-day :—

Sri T. L. Sasivarna Thevar.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 19th July 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : முதலில் எடுத்துக்கொள்ளவேண்டிய கேள்வியானது கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு அவர்கள் நோட்டீஸ் கொடுத்துள்ள "ஷார்ட் நோட்டீஸ்" கேள்வி நெ. 3 ஆகும். கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு அவர்கள் இன்னும் இங்கே வரவில்லை. ஆகவே அந்தக் கேள்வியை பிறகு எடுத்துக்கொள்ளலாம். இப்போது அடுத்த கேள்வியாகிய கேள்வி 143-ஐ எடுத்துக்கொள்ளலாம்.

Gramdan villages.

* 143 *Q.*—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have taken any steps to take over the Gramdan villages obtained by Acharya Vinobhaji in this State; and

(*b*) if so, what they are?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Government have appointed a Committee consisting of officials and non-officials including two representatives of the Sarvodaya Mandal, Tamil Nad under the Chairmanship of the Collector of Madurai for undertaking the survey of Gramdan villages and making suitable recommendations to the Government for the development of Gramdan villages in Madurai district. Based on the preliminary report of the Committee, they have sanctioned the disbursement of an amount up to rupees twenty lakhs as Takkavi loans to the agriculturists in Gramdan villages in Madurai district for the current cultivation season. They are also now examining the steps to be taken for taking over the Gramdan villages.

SRI A. VEDARATHNAM PILLAI : தக்காவிக் கடன்கள் அவர்களுக்கு எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன ? விநோபாஜிக்கு பட்டாதார்களால் கொடுக்கப்பட்டுள்ள தானப் பத்திரங்களின் அடிப்படையில் அவை கொடுக்கப்படுகின்றனவா, அல்லது வேறு எதேனும் 'ரெஜிஸ்டர் டாகுமெண்ட்' இன் பேரில் கொடுக்கப்படுகின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் அந்த தானப் பத்திரங்கள் அமலுக்கு வரவில்லை. சட்டப்பிரகாரம் அந்த பூமி முந்தைய சொந்தக்காரர்களுக்கே சொந்தம். ஆகையால் இப்போதுள்ள விதிகளின் அடிப்படையிலேயே அந்தக் கடன்கள் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

[19th July 1957

Sri A. A. RASHEED : Will the Hon. the Minister supply us information about the number of Gramdan villages so far obtained in our State?

The Hon. Sri C. SUBRAMANIAM : About 200 and odd, I think it is 212 or so.

Sri T. SAMPATH : தஞ்சாவூர் ஜில்லாவில் எவ்வளவு நிலங்கள் கிடைத்தன என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லமுடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போது குறிப்பிடப்படும் நிலங்கள் கிராம தானங்களாகக் கொடுக்கப்பட்டவை, பூமி தானமாகக் கொடுக்கப்பட்டவை அல்ல. மூலக் கேள்வி கிராம தான நிலங்கள் பற்றியது. ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள், தஞ்சாவூர் ஜில்லாவில் எவ்வளவு நிலங்கள் தானமாகக் கிடைத்தன என்ற தகவலுக்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Sri K. VINAYAKAM : May I know the philosophy behind this Gramdan movement and what happens to the ownership of the lands. Does it pass on to Acharya Vinobhaji as the proprietor of the lands or does it revert back to the villagers and when it reverts back, who pays the stamp duty for conveyance deeds, etc.?

The Hon. Sri C. SUBRAMANIAM : All the owners of the lands belonging to a particular village have agreed to surrender their ownership of the lands. The question, how to utilize the lands is under the consideration of Government. If I can give an indication, the idea of the Government is that this should be taken advantage of for communal ownership and communal tilling of the lands by the entire village.

Sri P. S. CHINNADURAI : கிராம தானமாகக் கொடுக்கப்பட்டுள்ள கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்களை உடனடியாக ஏற்படுத்தி, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த அரசாங்கம் கொடுக்கவிருக்கிற பணத்தைக் கொடுக்க முன்வந்தால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதற்கு அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போது அந்த கிராமங்களில் அந்த அந்த கிராமங்களிலுள்ள சமுதாயம் முழுவதுமே அங்கே உள்ள பூமிகளை விவசாயம் செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்யும் நிலையில், கூட்டுறவு முறையில்தான் அப்படிச் செய்யவேண்டும். ஆகவே கூட்டுறவுச் சங்கங்களை ரெஜிஸ்டர்செய்து, அவைகள் மூலம் எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டும் என்பதுபற்றித்தான் பரிசீலனை நடந்துவருகிறது.

Sri P. G. MANICKAM : முக்கியமாக நிலமில்லாத ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுப்பதன் பொருட்டு, நிறைய நிலமுள்ளவர்களிடம் நிலத்தைக் கேட்டு வாங்குவதற்காக, பூமிதான இயக்கத்தை வினோபாஜி ஆரம்பித்தார். அந்த நிலங்களின் மொத்தத்தில் 1/3 பங்கை ஹரிஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார். ஆகையரல் கிராம தானமாகக் கிடைத்த நிலங்களில் 1/3 பங்கு ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகின்றதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கிராமங்கள் பூராவும் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ள இடங்களில், அந்த கிராம நிலங்கள் எல்லாவற்றிலும் கிராம மக்கள் எல்லோருக்குமே அக்கறை இருக்கக்கூடியபடி ஏற்பாடு செய்யப்படும். ஆகையால், ஹரிஜனங்களுக்கு என்று அங்குள்ள நிலங்களைப் பிரித்துக்கொடுக்கவேண்டிய அவசியமில்லை.